1972 சனவரி 29]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இந்தச் சாலே அமைப்புக்கு ஒப்புதல் ஏற்கெனவே வழங்கப்பட்டு விட்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார். இந்த அழகர் கோவில் சாலேக்கு ஒப்புதல் கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்கிருர்கள். இது எவ்வளவு காலத்திற்குள் அமைக்கப்படும். ஒரு மைல் தூரந் தான் இருக்கிறது என்பதால் சீக்கிரமே அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இந்த சாலே அமைக்க ஒப்புதல் சமீபத்தில்தான் தரப்பட்டிருக்கிறது. சுமார் 2 மைல், 3 பர்லாங்கு தூரத்திற்கு அமைக்கப்படவேண்டும். அதற்கான எஸ்டி மேட் தொகை ரூ. 3.17 அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

Contribution to Government Arts College at Tiruttani

* 159 *Q.*—THIRU E. S. THYAGARAJAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state whether the Tiruttani Sri Subramania Swami Devasthanam has paid the contribution of Rs. 5,00,000 to the Government promised for opening a Government Arts College at Tiruttani?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இல்லே. நிதி வழங்கும் முறையினேப் பற்றி நிர்வாக அதிகாரி, அரசினே அணுகியுள்ளார்.

திரு. ஆ. பரந்தாமன் : தலேவர் அவர்களே, திருத்தணிக் கலேக் கல்லூரிக்கு கிடைத்திருக்கும் 20 எக்கர் நிலம் போதாது, மேலும் தேவைப்படுகிறது என்பதால், இன்னும் 20 எக்கர் நிலம் தேவஸ் தானத்திலேயே வாங்கித்தரக் கூடிய சூழ்நிலேயை அரசாங்கம் ஏற் படுத்திக் கொடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலேவர் அவர்களே, இது அரசாங்கத்திற்குச் செலுத்தவேண்டிய நிதியைப் பற்றிய கேள்வி. இடம் பற்றிய விவரக் குறிப்பு என்னிடத்தில் இல்லே.

கோவில்களில் தமிழில் அர்ச்சனே.

* 160 **வினா.—திரு. கே. என். குமாரசாமி** : மாண்புமிகு அறநிலேய துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

தமிழ் அர்ச்சனே சுலோகங்களே ஒவ்வொரு கோயில்களிலும் தமிழில் எழுதி வைக்கின்ற செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனேயில் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இல்லே.

திரு. கே. என். குமாரசாமி : தலேவர் அவர்களே, தமிழ் நாட்டில் பல்வேறு கோவில்களிலும் சமஸ்கிருத சுலோகங்களே

[1972 சனவரி 29

சொல்லப்படுகிறது ஏழை எளிய மக்களுக்குப் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் அந்த சுலோகங்களை தமிழில் எழுதி வைக்க அரசாங்கம் முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, சம்ஸ்கிருத சுலோகங்களை தமிழில் மொழி பெயர்க்க வேண்டிய அவசியம் இல்லை. தமிழிலேயே சுலோகங்கள் இருப்பதால், தற்போது சில கோவில்களில் தமிழிலே எழுதி வைத்திருக்கிறார்கள். படிப்படியாக எல்லாக் கோவில்களிலும் அந்த அந்தக் கோயில்களே அப்படிச் செய்ய நடவடிக்கை எடுப்பார்கள்.

திரு. எம். தேவராசன் : தலைவர் அவர்களே, கோவில்களில் அர்ச்சகர்களாக வருவதற்கு தகுதி என்ன? அவர்களுக்குப் பள்ளிக்கூடம் இருந்து, அதில் நற்சான்று இதழ்கள் வழங்கப்படுகின்றனவா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தற்போது அர்ச்சகர்களுக்கு பள்ளிகள் நடத்தப்படுகின்றன. அதில் எல்லா ஜாதியைச் சேர்ந்தவர்களும் படித்து அர்ச்சகர்கள் ஆகலாம் என்று சட்டத்திலேயும் மாறுதல் செய்தோம். அது இப்பொழுது உயர்நீதி மன்றத்தில் அப்பீலில் இருப்பதால் தற்போது நடவடிக்கை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன் : சார், கோவில்களில் அர்ச்சனை செய்யும் சுலோகங்கள் தெய்வங்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று அல்லது மனிதர்கள் புரிந்துக்கொள்ள வேண்டும் என்று செய்யப்படுகின்றன? தெய்வங்களின் திருப்திக்கா அல்லது மனிதர்களின் திருப்திக்கா ? அப்படி அதிலே எது சரியானது என்பதைச் சொன்னால். மக்கள் திருப்திப்படவேண்டும் என்றால் தமிழ் மொழியிலும், தெய்வத்திற்கு என்றால் எந்த மொழியில் வேண்டுமானால் இருக்கலாம் என்பதை ஒரு வழிமுறையாகச் செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, இறைவனைத் திருப்திப் படுத்தவா அல்லது பக்தர்களைத் திருப்திப்படுத்தவா என்பது அவரவர்களுடைய மனோநிலையைப் பொருத்ததாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையில் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]